# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:52** **தேதி:21.07.2015**

## ஒப்பந்த ஊழியர் பிரச்சனையில் அலட்சியம் காட்டும் மாவட்ட நிர்வாகங்கள்

அன்பார்ந்த தோழர்களே,

தமிழகத்தில் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளில் தமிழ் மாநில BSNL நிர்வாகம் நல்ல பல உத்தரவுகளை வெளியிட்டுள்ளது. ஆனால் பல மாவட்ட நிர்வாகங்கள் அவர்களின் பிரச்சனைகளை கையாள்வதில் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துக் கொள்கிறது. தமிழ் மாநில நிர்வாகம் மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் ஆகியவற்றின் உத்தரவுகளையும் அமுலாக்காமல் உள்ளனர். குறிப்பாக மதுரையிலும், திருச்சியிலும் இன்றைய தேதி வரை ஒப்பந்த ஊழியர்களுக்கு கடந்த மாத ஊதியம் வழங்கவில்லை. நிரந்தரமான அதிகாரிகள் அவர்கள் வாங்கக்கூடிய லட்சக்கணக்கான ஊதியத்தை அந்த மாத இறுதியிலேயே வாங்கிவிடும் போது ஒப்பந்த ஊழியர்களுக்கு கிடைக்கக் கூடிய ஊதியத்தை பெற்றுத் தருவதிலே அக்கறை காட்டுவதில்லை. அவர்களுக்கு கிடைப்பதோ மிக மிக குறைந்த ஊதியம்தான். அதுவும் அவர்களுக்கு குறித்த நாளில் கிடைக்கவில்லை என்றால் அந்த ஊதியத்தை நம்பி வாழும் அந்த ஒப்பந்த ஊழியரின் குடும்பம் என்ன பாடு படும் என்பதை சிந்திக்கக் கூட அவர்களுக்கு மனமில்லை. இந்த இரண்டு மாவட்டத்தை சார்ந்த ஒப்பந்த ஊழியர் சங்கமும், BSNL ஊழியர் சங்கமும் போராட்டங்களை நடத்திய பின்னரும் ஊதியத்தை பெற்றுத்தர நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ள அந்த மாவட்ட நிர்வாகங்கள் தவறி வருகின்றனர்.

அதே போல பாண்டிச்சேரி மாவட்டத்தில் உள்ள ஒப்பந்த ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு கடந்த ஆண்டு போனஸ் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் மற்றொரு பகுதியினருக்கு ஒப்பந்ததாரர் போனஸ் தரவில்லை. இது தொடர்பாக பல மாதங்கள், பல கட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு விட்ட்து. மாநில நிர்வாகமும் முறையான வழிகாட்டுதல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு கொடுத்து விட்டது. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளும், BSNL நிர்வாகமே அந்த ஊழியர்களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என உத்தரவும் போட்டு விட்டனர். தகுதி நீக்கம் செய்யப்பட்ட அந்த ஒப்பந்த்தாரரும், தனக்கு சேரவேண்டிய SECURITY DEPOSIT தொகையிலிருந்து ஒப்பந்த ஊழியர்களுக்கு தர வேண்டிய EPF, ESI மற்றும் போனஸ் ஆகியவற்றை அந்த ஊழியர்களுக்கு வழங்கிவிட்டு மீதமுள்ள தொகையை தனக்கு கொடுத்தால் போதும் என்று கடிதமும் கொடுத்து விட்டார். இவையெல்லாம் நடைபெற்று பல நாட்கள் ஆன பின்னும், பாண்டிச்சேரி மாவட்ட நிர்வாகம் அந்த ஊழியர்களுக்கு தர வேண்டிய போனஸ் தொகையை தர மறுத்து வருகிறது.

விடுபட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு போனஸ் தரவேண்டும் எனும் கோரிக்கையினை முன்வைத்து பாண்டிச்சேரி மாவட்ட ஒப்பந்த ஊழியர் சங்கமும், BSNL ஊழியர் சங்கமும் இணைந்து 14.07.2015 முதல் உண்ணாவிரத போராட்த்தில் ஈடுபட போவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு கடிதம் கொடுத்தனர். 13.07.205 அன்று மாவட்ட நிர்வாகம் மாவட்ட சங்க தலைவர்களை அழைத்து ஒரு வார கால அவகாசம் கேட்டனர். எனவே நமது மாவட்ட

சங்கங்களும் இந்த போராட்டத்தை ஒரு வார காலம் ஒத்தி வைத்தனர். ஆனால் பாண்டிச்சேரி மாவட்ட நிர்வாகம் தனது உறுதி மொழியை காப்பாற்றவில்லை. எனவே ஒத்திவைக்கப்பட்ட போராட்டத்தை 21.07.2015 அன்று மீண்டும் துவங்கியுள்ளது. மாதக்கணக்கில் உறங்கிய மாவட்ட நிர்வாகம் தற்போது விழித்தெழுந்துக் கொண்டதை போல பாசாங்கு காட்டுகிறது. இன்னமும் தமிழ் மாநில நிர்வாகத்தில் இருந்து உத்தரவு பெற்ற பின்பு தான் போனஸ் பட்டுவாடா செய்யப்படும் என்று கூறுகிறது. எழுத்து பூர்வமான உத்தரவாத கடிதம் கூட மாவட்ட நிர்வாகத்தால் கொடுக்க முடியவில்லை. பொறுத்துப் பார்த்ததில் இதுவரை பயன் ஏதும் இல்லாத காரணத்தால் இன்னமும் மாவட்ட நிர்வாகத்தின் வெத்து வாக்குறுதிகளை நம்பி பயன் இல்லை என்ற காரணத்தால் போராட்டம் தொடர்கிறது.

BSNL நிறுவனத்தை பாதுகாக்க கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள நமது அகில இந்திய FORUM விடுத்துள்ள அறைகூவலை நிறைவேற்ற வேண்டிய காலத்தில் இது போன்ற போராட்டங்களை மாவட்ட நிர்வாகங்கள் தூண்டி விடுவதில் யாருக்கு பயன் கிட்டும் என்பதைக்கூட மாவட்ட நிர்வாகங்கள் புரிந்துக் கொள்ள மறுக்கினறனர். மாநில நிர்வாகம் மற்றும் கார்ப்பரேட் அலுவலகம் போடுகின்ற உத்தரவுகளை அமுல் படுத்த தவறும் இது போன்ற மாவட்ட நிர்வாகங்களை, மாநில நிர்வாகம் சரி செய்ய வேண்டும். இல்லையெனில் தொழில் அமைதி கெடும். போட்டியாளர்க்ளை சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் BSNL-க்காக பணியாற்றும் ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான ஊதியத்தையும் சலுகைகளையும் பெறுவதற்கு கூட போராட வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தக் கூடாது என கேட்டுக் கொள்கிறோம்.

பாண்டிச்சேரி, மதுரை, திருச்சி மாவட்ட நிர்வாகங்களை தமிழ் மாநில நிர்வாகம் சரியாக வழிகாட்டி ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்க கேட்டுக் கொள்கிறோம். தீர்த்து வைக்கும் என நம்புகிறோம். இல்லையெனில் போராட்டங்கள் தீவிரமாகும்.



**பாண்டிச்சேரி உண்ணாவிரத காட்சிகள்**

போராடும் தோழர்களுக்கு வீர வாழ்த்துக்களை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக உரித்தாக்கிக் கொள்கிறோம். ஒன்று படுவோம்! கோரிக்கைகளை வென்றடையும் வரை போராடுவோம்! வெற்றி பெறுவோம்!!

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**